# தமிழர் மரபில் காசி




सत्यमेव जयते

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை – 600 100.

# தமிழர் மரபில் காசி

सत्यमेव जयते

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
*செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம்*
*சென்னை - 600 100.*

**CICT Publication No. 155**

**Tamiḻar Marapil Kāci**
© Central Institute of Classical Tamil, Chennai
*Edition*: First, 2023

*Pages*: 49

*Size*: Octavo 1/8

*Published by*

Central Institute of Classical Tamil
Chemmozhi Salai, Perumbakkam, Chennai - 600 100
Phone: 044-22540125 Email: registrar@cict.in Website: www.cict.in

**ISBN : 978-81-19249-87-9**

*Typeset by*

Central Institute of Classical Tamil

---

**பதிப்புக் குழு**

*முதன்மைப் பதிப்பாசிரியர்*

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**
*இயக்குநர்*

*பதிப்பாசிரியர்கள்*

**முனைவர் த. சரவணன்**
*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்*
**முனைவர் ந. பெரியசாமி**
*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்*
**முனைவர் சி. இராமச்சந்திரன்**
*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்*
**திருமதி ம. தாமரைச்செல்வி**
*இளநிலை ஆய்வு வளமையர்*
**திரு. க. சங்கர்**
*இளநிலை எழுத்தர்*
**திரு. தி.ஞா. அருள்ஒளி**

*தொழில்நுட்பக் குழு*

**திரு சு. கார்த்திகேயன்**
*நிரலாளர்*
**முனைவர் இரா. அகிலன்**
*நிரலாளர்*
**திரு அ. முருகசுவாமிநாதன்**
*நிரலாளர்*

***பேராசிரியர் இரா. சந்திரசேகரன்***
*இயக்குநர்*
*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்*
*சென்னை*

# முகவுரை

*‘ஒரே பாரதம் உன்னத பாரதம்’ என்னும் முழக்கத்தை முன்வைத்து மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்திய அரசு ‘காசித் தமிழ்ச் சங்கமம்’ என்ற பெருவிழாவை நடத்தி வருகிறது. புண்ணிய பூமியான காசிக்கும் தமிழகத்திற்கும் இடையில் தொன்றுதொட்டு வரும் பிணைப்புகளைப் பாரத மக்களுக்கு உணர்த்தும் வகையிலும் உறவுகளை வலுப்படுத்தும் வகையிலும் ‘காசித் தமிழ்ச் சங்கமம்’ நிகழ்ச்சி இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் சிறப்பான வகையில் நடத்தப்படுகிறது.*

*2022 நவம்பர் 19ஆம் நாள் காசித் தமிழ்ச் சங்கமத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஆற்றிய உரையில், ‘‘அமிழ்த காலத்தில் நாம் எடுக்கும் தீர்மானங்கள் நாட்டின் ஒற்றுமையாலும் நாட்டு மக்கள் அனைவரின் கூட்டு முயற்சியாலும் நிறைவேற்றப்படும்’’ என்பதை வலியுறுத்தியிருந்தார். ‘ஒருவருக்கொருவர் மனதைப் புரிந்து கொள்ளுதல்’ என்ற பாரதப் பண்பாட்டின் அடிநாதமான கொள்கையின்படி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இயல்பான கலாச்சார ஒற்றுமையுடன் வாழ்ந்து வருவதே இந்தியாவின் பண்பாடு ஆகும். மேலும், சௌராட்டிரத்தில் உள்ள சோமநாதர் முதல் இராமேசுவரம் வரை 12 ஜோதிர்லிங்கங்களை நாள்தோறும் காலையில் நினைவுகூர்தலைக் கடமையாகக் கொண்டுள்ளோம். அதேபோல் நீராடி வழிபடும்போது, கங்கை, யமுனை முதல் கோதாவரி, காவேரி வரை உள்ள அனைத்து நதிகளும் நமது நீரில் குடியிருக்கட்டும் என்கிற மந்திரங்களை ஓதுவோம்! அதாவது இந்தியாவின் அனைத்து நதிகளிலும் குளிப்பது போல் உணர்கிறோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் இந்தப் பழமை, பாரம்பரியத்தை வலுப்படுத்திச் சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டின் ஒற்றுமை இழையாக மாற்றியுள்ளோம். இவை நமது கடமைகளை உணர்த்துவதோடு,*

தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்கான ஆற்றலாக இருக்கும். இந்தக் காசித் தமிழ்ச் சங்கமத்தில் இருந்து வரும் அமுதத்தை இளைஞர்களின் ஆராய்ச்சிக்காக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இந்த விதைகள் தேசிய ஒருமைப்பாட்டின் ஆலமரமாக மாற வேண்டும். ‘நாட்டு நலனே நமது நலன்’ என்கிற தாரக மந்திரம் நம் நாட்டு மக்களின் வாழ்க்கை மந்திரமாக மாற வேண்டும். உண்மையில், இது இந்தியாவின் வலிமை மற்றும் சிறப்பியல்புகளின் கொண்டாட்டமாகும். இதனால் காசித் தமிழ்ச் சங்கமம் தனித்துவம் பெற்றது எனத் தம் உரையில் கூறினார்.

இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த ஆண்டு ஒரு மாத கால அளவில் காசித் தமிழ்ச் சங்கமம் கொண்டாடப்பட்டது. அதன் தொடக்க விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வெளியீடுகளான சமஸ்கிருதம், இந்தி, மராத்தி, ஒடியா, மலையாளம், சௌராஷ்டிரம், வாக்ரிபோலி, படகா, நேபாளி, அரபி, உருது, பாரசீகம், கெமர் ஆகிய 13 மொழிகளில் அமைந்த திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்களை மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வெளியிட்டார்.

இவ்வாண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பணியாளர்களின் தலைசிறந்த ஆய்வுப் பணிகளின் மூலம் தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் ‘தமிழர் மரபில் காசி’ என்ற இந்த நூல் வெளியிடப்படுகிறது.

இத்தகைய அரிய வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் மாண்புமிகு மத்தியக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரத நாட்டின் பண்பாட்டுப் பெருமைக்கும் ஒற்றுமைக்கும் சான்றான இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பெருமையுடன் பங்கேற்பது பெருமகிழ்ச்சிக்குரியதாகும்.

ஒ-ம்

**(இரா. சந்திரசேகரன்)**

# தமிழர் மரபில் காசி

***"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்***
***வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"***

*என்பது தாயுமானவர் வாக்கு. பாரதநாடு மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய இம்மூவகைச் சிறப்பினாலும் மேன்மை பெற்று விளங்குவது. பாரதத்தின் வடபகுதியில் காசியும் தென்பகுதியில் இராமேசுவரமும் அமைந்து இந்நாட்டின் வழிபாட்டு ஒருமைப்பாட்டைத் தொன்றுதொட்டு நிலைநிறுத்தி வருகின்றன. வடநாட்டில் உள்ளவர்கள் தென்னாட்டு இராமேசுவரத்திற்கு வந்து வழிபடுவதையும் தென்னாட்டில் உள்ளவர்கள் வடநாட்டுக் காசிக்குச் சென்று வழிபடுவதையும் தம் வாழ்வில் புனிதமான செயல் என்று கருதி ஒழுகி வருகின்றார்கள். இராமேசுவரம் போகம் வழங்குவதிலும் காசி முத்தி வழங்குவதிலும் முன்னணியாகத் திகழ்கின்றன. காசிக்கும் இராமேசுவரத்திற்கும் இடையே நெடுந்தொலைவு இருந்தும்கூட இவ்விரண்டு திருத்தலங்களையும் ஒன்றுசேர்த்துக் காசி-இராமேசுவரம் என்று நெருக்கமாக வழங்குவது நமது நாட்டிலுள்ள மரபு. இந்தியாவின் பண்பாட்டுத் தலைநகரமாக விளங்கும் வாரணாசி என்னும் காசி நகரம் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பாலமாகத் திகழ்வதை நாம் உணரலாம்.*

> *"காசி இந்தியாவின் எந்தக் குறிப்பிட்ட ஆட்சிப் பகுதிக்கும் ஆளுகைக்கும் உட்பட்டதாக இல்லாது இந்தியாவின் அனைத்து ஆட்சியாளர்களுக்கும் உரிமையானதாகப் பொதுமையுடன் திகழ்ந்துள்ளது. காசியின் சிறப்புக்கூறு பல்வேறு சமயங்களின் பத்திமையுணர்வு பேராறாய் இணைந்து சங்கமிக்கும் மைய இடமாகவும், இந்தியக் கல்வி அறிவின் பல்வேறு கிளைமரபினரும் ஓரிடத்து ஒருங்கிணைந்து இயலும் இடமாகவும் விளங்குகிறது."*

*என்ற இரவீந்திரநாத் தாகூரின் கூற்றும் இங்கு எண்ணிப்பார்க்கத் தக்கது. தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான சிவாலயங்களில் காசிவிசுவநாதருக்கென்று தனிச் சன்னிதி ஒன்று இருக்கும். காசியின்*

நினைவாகத் தென்காசி, சிவகாசி, விருத்தகாசி (விருத்தாசலம்), புட்பவன காசி (திருப்பூவனம்), கடம்பன் காசி (கடம்பர் கோயில்) போன்ற ஊர்களும் தமிழகத்தில் உள்ளன. ஸ்ரீ குமாரசுவாமித் திருமடம், நகரத்தார்களின் ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் முதலானவை காசிக்கும் தமிழகத்திற்குமான தொடர்பிற்கான சான்றுகள். காசிக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயான தொடர்புகள் குறித்தும் தமிழ் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணலாகும் காசியைப் பற்றிய குறிப்புகள் குறித்தும் இனிக் காணலாம்.

**காசி யாத்திரை**

தேவாரத்தில் வைப்புத்தலமாகக் குறிப்பிடப்படும் காசிக்கு யாத்திரை செல்வது என்பது இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவரது வாழ்நாள் ஆசையாகும். காசி யாத்திரை செல்வது என்பது காசிக்கு மட்டும் செல்வது கிடையாது; காசியுடன் இராமேசுவரமும் செல்வதுதான்.

காசி யாத்திரை செல்ல விரும்புபவர்கள் முதலில் இராமேசுவரம் சென்று அங்குள்ள அக்கினி தீர்த்தமாகிய கடலில் நீராடி ஈர உடையுடன் கடலில் மூன்று தடவை மூழ்கி எழ வேண்டும். ஒவ்வொரு தடவை மூழ்கும்போதும் ஒவ்வொரு பிடி மணல் எடுக்க வேண்டும். முதல்தடவை மூழ்கி எடுக்கும் மணலைச் 'சேது மாதவ' என்று கூறி லிங்கமாகப் பிடித்தும், இரண்டாவது தடவை மூழ்கி எடுக்கும் மணலைப் 'பிந்து மாதவ' என்று கூறி லிங்கமாகப் பிடித்தும், மூன்றாவது தடவை மூழ்கி எடுக்கும் மணலை 'வேணு மாதவ' என்று கூறி லிங்கமாகப் பிடித்தும், கரையில் வைக்க வேண்டும். பின்னர் மூன்று லிங்கத்திற்கும் விபூதி சந்தனம் குங்குமம் இட்டு, வில்வ இலை போட்டு ஐந்தெழுத்து மந்திரம் ஓதி வழிபட வேண்டும். பின் சேதுமாதவ லிங்கத்தை மட்டும் எடுத்துப் பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும். அதன் பின் ஈர உடையை மாற்றிக்கொண்டு இராமநாதரையும் பர்வதவர்த்தினி அம்மனையும் மாலை சாற்றி அர்ச்சனை செய்ய வேண்டும். பின் இறைவனை வழிபட்டுவிட்டுக் காசிக்குக் கிளம்ப வேண்டும். உடனே காசிக்குச் செல்ல இயலாதவர்கள் தம்முடன் வைத்திருக்கும் சேதுமாதவ லிங்கத்தையும் கோடி தீர்த்தத்தையும் பூசை அறையில் வைத்துக்

காசி செல்லும் வரை பூசை செய்ய வேண்டும். காசி செல்லும்போது மறக்காமல் சேது மாதவ லிங்கத்தையும் கோடி தீர்த்தத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும். காசி செல்பவர்கள் முதலில் அலகாபாத் (பிரயாக்ராஜ்) சென்று அங்குச் சேது மாதவ லிங்கத்தைத் திரிவேணி சங்கமத்தில் இட வேண்டும். அங்கிருந்து சிறிது தீர்த்தத்தை எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு காசி சென்று அங்குள்ள விசுவநாதருக்கு இராமேசுவரத்திலிருந்து எடுத்துவந்த கோடி தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து வணங்க வேண்டும். அதன் பிறகு கயா சென்று அங்கு நமது இறந்த மூதாதையருக்குப் பித்ருக்கடன் செய்தும் மோட்ச தீபம் ஏற்றியும் வழிபட வேண்டும். இதனால் இறந்த மூதாதையரின் ஆசி நமக்கும் நம் சந்ததியினருக்கும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

அதன் பின்னர் இராமேசுவரம் வரவேண்டும். அலகாபாத்தில் எடுத்த தீர்த்தத்தை இராமேசுவரம் இராமநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டுக் காசிராமேசுவர யாத்திரையை நிறைவு செய்ய வேண்டும். இப்படிச் செய்தால்தான் காசி இராமேசுவர யாத்திரையின் முழுப்பலனும் கிடைக்கும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகப் பின்பற்றப்படுகிறது.

சிதம்பரம் மௌன தேசிகர் ஆதீனம் ஸ்ரீமத் சபாபதி சுவாமியவர்களால் 'ஸ்ரீ காசியாத்திரை விளக்கம்' என்னும் நூல் 1939ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இந்நூல் காசி யாத்திரை மேற்கொள்வது குறித்துக் கூறும் பயண வழிகாட்டியாய் விளங்குகிறது. காசி யாத்திரைக்குச் செல்லும் வழியிலுள்ள முக்கியமான திருத்தலங்களையும் இந்நூல் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

திருக்கைலாச பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனத்து ஆறுமுகசுவாமிகளால் 1882ஆம் ஆண்டு அருளிச்செய்யப்பட்ட 'தலயாத்திரைப் பொதுவிதி, காசிமான்மியம்' என்னும் நூலில் காசிநகர வரலாறும், காசியாத்திரைக்கு யார்யார் செல்லலாம் என்பதை அதிகாரிகள் என்னும் தலைப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், யாத்திரை நியமம், முண்டன விதி, ஸ்நான விதி, தர்ப்பண விதி, தீர்த்தச் சிராத்த விதி, தானம் செய்தல், கயா வரலாறு, ஸ்ரீகாசிமான்மியம் ஆகியவையும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## அகராதிகளிலும் வழக்காறுகளிலும் காசி

*காசி என்னும் சொல் குறித்து அகராதிகளிலும் மக்கள் வழக்காறுகளிலும் பல்வேறு சொற்கள் புழங்குகின்றன.*

***காசிக் கம்பு*** : *ஆனியில் விதைத்துப் புரட்டாசியில் கொய்யப்படும் கம்புப்பயிர்*

***காசிக்கமலம்*** : *பட்டை தீர்ந்த வைரக்கல் வகை*

***காசிக்கல்*** : *காந்தசத்தி உள்ள ஒருவகை இரும்புக்கட்டி*

***காசிக்குப்பி*** : *கங்காசலம் அடைத்த குப்பி*

***காசிச்சம்பா*** : *நெல்வகை*

***காசிச்சாரம்*** : *ஒருவகை உப்பு*

***காசிச்சீரம்*** : *1. சிறு சீரகம்; 2. பெருஞ்சீரகம்*

***காசிச்செம்பு*** : *ஒரு பாதி செம்பும் மறு பாதி பித்தளையுமாகச் செய்யப்பட்டுக் கங்கை நீர் கொணர்தற்குரிய பாத்திரம்*

***காசித்தீர்த்தம்*** : *காசியில் எடுக்கப்படும் கங்கை நீர்*

***காசித்தும்பை*** : *1. செடிவகை; 2. தும்பை வகை*

***காசிப்பட்டு*** : *ஒருவகைப் பட்டாடை*

***காசியரளி*** : *தங்க அரளி*

***காசியலரி*** : *அலரி வகை*

***காசிலவணம்*** : *உப்பு வகை*

***காசிப்பார்ப்பான்*** : *மீன் வகை (நாஞ்சில் நாட்டு வழக்கு)*

***காசிக்கிருட்டி*** : *புள்வகை (யாழ்ப்பாண அகராதி)*

*மேற்கண்ட சொற்கள் காசி நகருக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயான பண்பாட்டுத் தொடர்பினைப் பறைசாற்றுகின்றன.*

**காசி யாத்திரை என்னும் திருமணச் சடங்கு**

காசி யாத்திரை என்னும் திருமணச் சடங்கு தமிழ்நாட்டில் சில சமூகங்களிடையே காணப்படுகிறது. திருமணத்திற்கு முன் மணமகன் நிகழ்த்தும் ஒரு சடங்கான இதுகுறித்துத் 'தமிழர் திருமணம்' என்னும் நூலில் சசிவல்லி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "இதைக் குறித்த ஒரு செய்தி பொதுவாக எல்லோராலும் சொல்லப்படும். அதாவது முன்னாளில் கல்விபெற விரும்பும் மாணவர்கள் நல்ல குருவிடம் குருகுலவாசம் செய்து வித்தைகளை முழுமையாகக் கற்ற பின்பு அவருடைய ஆசியைப் பெற்று வீடு திரும்புவர். அப்பொழுது குருவானவர் சீடனை நோக்கி, 'மாணவனே என்னுடைய மனம் மகிழ நீ வித்தைகளை நன்கு கற்றாய். இனி உன் பெற்றோரிடம் சென்று, இல்லற வாழ்வை மேற்கொண்டு உன் கடமைகளைச் செய்வாயாக. அவ்வாறு உன் பெற்றோரிடம் போய்ச்சேரும் முன் புண்ணிய தீர்த்த யாத்திரைகள் செய்து காசிக்குச் சென்று கங்கை நீராடிச் செல்வாயாக' என்று கூறி அனுப்புவார். அந்த மாணவன் அப்படியே செல்ல, வழியிலே சிலர் அவனைக் கண்டு காசிக்குப் போக வேண்டாம் என்றும் என் கன்னிகையைக் கொடுத்துக் கல்யாணம் செய்து வைப்பதாக அவருள் ஒருவர் கூறியதாகவும் பழைய காலத்திய பழக்க வழக்கங்கள் சொல்லுகின்றன. இதைத்தான் மாப்பிள்ளை திருமணவினை தொடங்குவதற்கு முன் காசியாத்திரைக்குப் புறப்படுவதாக ஒரு சம்பிரதாயத்தை வழக்கில் கொண்டுவந்தனர். இதன்பொருள் பிரும்மசரிய ஆசிரமத்தில் மணமகன் கடைப்பிடித்த கட்டுத்திட்டங்களிலிருந்து விடுபடும் நேரந்தான் காசியாத்திரை. அப்போதுதான் காலுக்குச் செருப்பு, குடை, பையிட்டுக் கொள்ளுதல், கண்ணாடியில் முகம் பார்த்தல் முதலியவற்றைச் செய்ய அவனுக்கு அனுமதி தரப்படுகிறது.
>
> காசி யாத்திரைக்குக் கிளம்பும் மணமகனிடம் பெண்ணின் தகப்பனார் (ஒரு சாராரில் பெண்ணின் சகோதரன்) 'அப்பா இப்போது காசிக்குப் போக வேண்டாம். என் பெண்ணை

*மணந்துகொண்டு, இனிது இல்லறம் நடத்து. பல ஆண்டுகள் இல்லறம் நடத்திய பிறகு, பிதுர் காரியங்களைச் செய்ய மனைவியுடன் பின்னர்ப் போகலாம் என்பார். மணமகனும் சம்மதப்பட்டுத் திரும்பி வருவான். பிறகு மணப்பலகையில் அமரச் செய்து மருமகன் காலைப் பிடித்துப் பெரிய தட்டில் வைத்து மஞ்சள் நீராட்டி வெள்ளியாலான மெட்டியைக் கால்விரலில் அணிவிப்பார். பிறகு புதிய குடையை விரித்துப் பிடித்து மணமகனைப் பந்தலுக்கு அழைத்துச் செல்வார்.”*

*(சசிவல்லி. 1985. தமிழர் திருமணம். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.)*

## குமரகுருபரர் காசியில் மேற்கொண்ட பணி

*கி.பி.17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் குமரகுருபரர். இவர் தருமபுர ஆதீனத் தலைவர் விருப்பப்படி வடநாட்டிலுள்ள காசியம்பதியடைந்து மறைந்து கிடந்த விசுவலிங்கப் பெருமாள் திருமேனியை வெளிக்கொணர்ந்து வழிபாடு இயற்ற வழி செய்தார்.*

*அங்குத் தம்முடைய கல்வியறிவினாலும் தவப்பண்பினாலும் டில்லி பாதுஷாவின் பெருமதிப்பைப் பெற்றார். டில்லி பாதுஷாவோடு பேசுவதற்கு அந்நாட்டு மொழி அறிய வேண்டும். ஆதலால் கலைமகளை வேண்டிச் ‘சகலகலா வல்லி மாலை’ என்னும் பிரபந்தத்தை இயற்றி இந்துஸ்தானியைப் பேசும் ஆற்றல் பெற்றார். பாதுஷாவும் இவரது விருப்பத்திற்கு இணங்கி, இவர் காசியில் இருப்பதற்குரிய மடம் அமைத்துக்கொள்ளக் கேதார கட்டத்தில் இடம் அளித்தார். குமரகுருபர சுவாமிகளும் காசியில் மடம் நிறுவிச் சைவம் வளரத் துணைசெய்தார். அது இந்நாளில் ‘ஸ்ரீகுமாரசுவாமி மடம்’ என்ற பெயரில் உளது. அத் திருமடத்தில் தங்கியிருந்த காலத்தில் இவர் காசித்துண்டி விநாயகர் பதிகமும் காசிக்கலம்பகமும் இயற்றியருளினார். தம் திருமடத்தில் புராணசாலை ஒன்று ஏற்படுத்திக்கொண்டு சிவபுராணப் பிரசங்கங்கள் செய்து சைவத்தையும் தமிழையும் சிறப்பித்தார். அங்கு இவர் ஆற்றிய கம்பராமாயணச் சொற்பொழிவைக் கேட்ட துளசிதாசர் என்ற அருளாளர் பிற்காலத்தில் தாம் இயற்றிய இந்தி இராமாயணத்தில் சுவாமிகளின் கருத்துகளை அமைத்துப் பாடியுள்ளார் என்பர். கேதார கட்டமும் அறச்சாலையும் ஏற்படுத்திச் சிவப்பணிகள் பல ஆற்றிப்*

பன்னெடு நாட்கள் அங்குத் தங்கியிருந்தருளிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஒரு வைகாசி மாதத்துக் கிருஷ்ணபட்சம் திருதியையில் சிவபெருமானின் திருவடி நிழலை எய்தினார்.

## சரபோஜி மன்னர் காசியில் மேற்கொண்ட திருப்பணி

இரண்டாம் சரபோஜி ஆழ்ந்த சமய நம்பிக்கை கொண்டவர். முத்திநகர் ஏழில் ஒன்று எனச் சைவர்கள் கருதும் காசித் தலத்துக்குச் சரபோஜி மன்னர் 23.09.1820 அன்று தன் பயணத்தை 3000 பேர் கொண்ட பெருங்குழுவுடன் மேற்கொண்டார். அப்பெரும்பயணம் முடிந்து 24.04.1822 அன்று தஞ்சாவூர் வந்தடைந்தார்.

10.07.1821 அன்று காலை 8 மணியளவில் காசி சென்று சேர்ந்த சரபோஜி மன்னர் அங்குள்ள ஸ்ரீ குமாரசுவாமி மடத்தில் தங்கினார். அடுத்த நாள் கங்கையாற்றில் மணிகர்ணிகை கட்டத்தில் (படித்துறை) திருமுழுக்காடினார். அங்குள்ள மணிகர்ணிகை கட்டத்தில் சில திருப்பணிகளையும் செய்ததோடு நாள்தோறும் இம்மணிகர்ணிகா தீர்த்தத்தில் சரபோஜி மன்னர் நீராடினார். அதன் நினைவாக, சரபோஜி மன்னர் தஞ்சாவூர்க் கோட்டைக்குள் கீழராசவீதியில் கட்டிய கோயிலே இம்மணிகர்ணிகேசுவரர் கோயில் ஆகும். 1827இல் இக்கோயில் கட்டி முடிக்கப்பெற்றுக் குடமுழுக்குச் செய்யப்பெற்றது. சரபோஜி மன்னர் புதியதாகக் கட்டிய காரணத்தால் புதுக்கோயில் என்றும் அழைக்கப்பெறும்.

> இக்கோயிலில் மூல இலிங்கமும் விநாயகர் சந்நிதியில் உள்ள இரண்டு லிங்கங்களும் வேறு எங்கும் இல்லாத வகையில் பிரம்மா, விட்டுணு, மகேசுவரர் ஆகிய மும்மூர்த்திகள் எழுத்தருளியுள்ள இலிங்க வடிவங்களும் காசியிலிருந்து கொணர்ந்தவை என்பர்.
>
> (செ. இராசு, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987, ப.12.)

இவ்வாறு, தமிழர் மரபில் காசியானது (வாரணாசி) பண்பாட்டுப் பிணைப்பினைக் கொண்டு விளங்குகிறது.

> **“தேசொடும் பொலிந்து முத்தித் திருமகள் உறைதல் தன்னால்**
> **காசி யென்றுரைப்பர்”**

என்பதாகக் காசிகண்டம் எனும் நூல் காசி என்பதற்கு ஒளி என்ற பொருளுண்டு என்பதை விளக்குகிறது. தமிழக மக்களும் தங்கள் வாழ்வில் ஒளிபெறவேண்டும் என்பதற்காகத் தங்கள் வழக்காறுகளிலும் ஊர்ப் பெயர்களிலும் காசி என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளமையை அறிய முடிகிறது.

மேலும், காசியின் வேறொரு பெயரான வாரணவாசி என்ற பெயரில் தமிழகத்தில் செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்குச் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் வாலாஜாபாத் என்னும் ஊருக்கு அருகில் வாரணவாசி என்னும் பெயரில் ஓர் ஊர் அமைந்துள்ளது.

அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூருக்கு அருகிலும் வாரணவாசி என்னும் பெயரில் ஓர் ஊர் உள்ளது. இவ்வூரில் உள்ள தொல்லியல் புதைபொருள் காட்சியகம் பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதி கடலாக இருந்ததற்குச் சான்றாகத் திகழ்கிறது.

காசியில் குடிகொண்டுள்ள பெருமான் விசுவநாதர் பெயரால் 452 திருக்கோயில்களும் விசாலாட்சி அம்மன் பெயரால் 14 திருக்கோயில்களும் அன்னபூரணி அம்மன் பெயரால் 7 திருக்கோயில்களும் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

இவை தமிழகத்திற்கும் காசிக்கும் உள்ள உறவைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன.

★★★★★

# காசி(வாரணாசி) பற்றிய தமிழகச் சான்றுகள்

*காசி என்னும் வாரணாசி குறித்துத் தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ள இடங்கள் குறித்தும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இடம்பெற்றுள்ளவை குறித்தும் காசியை மையமிட்டு உருவாகியுள்ள தமிழ் இலக்கியங்கள் குறித்தும் வாய்மொழி வழக்காறான பழமொழிகளில் காசி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளவை பற்றியும் இங்கு விளக்கப்படுகிறது.*

**காசி (வாரணாசி) குறித்துத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுவன:**

**கலித்தொகை:**

> ***தெருவின்கண் காரணம் இன்றிக் கலங்குவார்க் கண்டுநீ***
> ***வாரணவாசி பதம்பெயர்த்தல் ஏதில*** *(60: 12,13)*

*தெருவில் காரணமில்லாமல் கலங்குகின்றவர்களைப் பார்த்து, மாற்றார் துயரத்தைத் தம் துயராகக் கொள்ளும் வாரணவாசிக்காரர்களின் குணத்தைப் பெறுதல் நமக்கு அயலானது என்பது மேற்கண்ட பாடலடிகளின் பொருள். இதன் மூலம் வாரணவாசியில் வாழ்ந்த மக்களின் நல்லியல்புகளைச் சங்கப் பாடலான கலித்தொகை குறிப்பிடுகிறது.*

*வாரணாசிக்கும் சங்க காலத் தமிழகத்துக்குமான தொடர்பு இதனால் புலனாகிறது. காசி நகரானது வாரணவாசி என்னும் பெயரில் பதிவாகியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.*

**சிலப்பதிகாரம்:**

> ***மத்திம நன்னாட்டு வாரணம் தன்னுள்***
> ***உத்தர கௌத்தற்கு ஒருமகன் ஆகி***
> ***உருவினும் திருவினும் உணர்வினும் தோன்றிப்***

***பெருவிறல் தானம் பலவும் செய்தாங்கு***
***எண்ணால் ஆண்டின் இறந்த பிற்பாடு***
***விண்ணோர் வடிவம் பெற்றனன் ஆதலின்***

*(மதுரைக்காண்டம், அடைக்கலக்காதை: 178-183)*

*நடுநாட்டகத்தில் வாரணவாசி என்னும் நகரத்தின்கண் உத்தர கௌத்தன் என்னும் அரசனுக்கு ஒரே மகனாக அழகினோடும் திருவோடும் உணர்வினோடும் பிறந்து, வள்ளன்மையில் பெரிய வெற்றி உடையவனாய்த் தானங்கள் பற்பலவும் செய்து அவ்வரசு உரிமையில் முப்பத்திரண்டு ஆண்டு கழிந்தபின்னர்த் தெய்வ வடிவம் பெற்றனன் தேவகுமரன் என்பது மேற்கண்ட பாடலடிகளின் கருத்தாகும்.*

*இதன் மூலம் வாரணம் என்னும் சொல் வாரணாசியை குறிக்கப் பயன்பட்டுள்ளமையை மேற்கண்ட பாடலடிகள் மூலம் அறியலாம்.*

**மணிமேகலை:**

***வார ணாசிஓர் மறைஓம் பாளன்***
***ஆரண வுவாத்தி யபஞ்சிகன் என்போன்***

*(ஆபுத்திரன் திறமறிவித்த காதை:3,4)*

***வார ணாசிஓர் மாமறை முதல்வன்***
***ஆரண வுவாத்தி யரும்பெறல் மனைவியான்***

*(ஆபுத்திரன் திறமறிவித்த காதை: 78,79)*

*மேற்கண்ட மணிமேகலைப் பாடலடிகளில் வாரணாசியில் வாழ்ந்த வேத ஆசிரியனாக விளங்கிய அபஞ்சிகன் என்பவனைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**நீலகேசி:**

***காசி நாட்டினும் சேடிய நாட்டினும் காணா*** *(1-44/2)*

*காசி, சேடியம் ஆகிய நாடுகளில் நீலகேசி திரிந்ததாக நீலகேசி நூலில் காசி குறித்துக் காணப்படுகிறது.*

**சூளாமணி:**

***மூசிநாட் சுரும்பு பாய முருகுடைந் துருக்குஞ் சோலைக்***
***காசிநாட் டரசன் செங்கோற் கதிர்முடிக் கச்ச னென்பான்***

***மாசினால் கடலந் தானை மன்னமற் றவற்குத் தேவி***
***தூசினால் துளும்பும் அல்குல் சுதஞ்சனை சுடரும் பூணாய்***

*(தூதுவிடு சருக்கம், 536)*

*‘குற்றமற்ற நான்கு கடல்போன்ற தேர் குதிரை யானை காலாள் என்னும் அழகிய நால்வகைப் படைகளையுடையவனும் விளங்குகின்ற அணிகலன்களை உடையவனும் காலையில் சுரும்பு வண்டுகள் மொய்த்துப் பாயாநிற்க, தேன் உடைந்து உகுக்கின்ற சோலையையும் செங்கோலையும் ஒளியுள்ள முடியையும் உடையவன் காசிநாட்டுக்கு உரிய அரசன் கச்சன். அவன் மனைவி, பட்டாடை அசைக்கப்பெற்ற அல்குலையுடைய சுதஞ்சனை என்பவள். அருகக் கடவுள் உண்டாக்கிய ஐந்து அரச குலங்களுள் ஒன்றில் பிறந்து அறநூல் முறைப்படி உலகங் காக்கும் கச்சனுக்கு மனைவி இவள்’ என்பது மேற்கண்ட பாடலடிகளின் பொருளாகும். இப்பாடல் மூலம் காசியை ஆண்ட கச்சன் என்னும் மன்னன் குறித்து அறிந்துகொள்ள முடிகிறது.*

***ஊழிகாண் பரிய தோன்ற லுக்கிர குலத்து வேந்தன்***
***வாழைதாழ் சோலை வேலி வாரண வாசி மன்னன்***
***சூழிமா லியானை யுந்திச் சுடர்குழை திருவில் வீச***
***ஏழையர் கவரி வீச வெழினக ரிசைப்பச் சென்றான்***

*(சுயம்வரச் சருக்கம்: 1787)*

*மேற்கண்ட சூளாமணிப் பாடலின் மூலம் வாரணவாசி மன்னன் உக்கிர குலத்து வேந்தன் என்பது பெறப்படுகிறது.*

**பெருங்கதை:**

***காசிஅரசன் காதலி மற்று அவன்*** *(மகதக் காண்டம்: 6/173)*

***காசி அரசன் பாவையைக் கண்டே*** *(வத்தவக் காண்டம்: 6/44)*

***காசி அரசன் மாசுஇல் மட மகள்*** *(வத்தவக் காண்டம்: 15/45)*

***வாரணவாசி வளம் தந்து ஓம்பும்*** *(மகதக்காண்டம்: 17/13)*

*எனப் பெருங்கதையில் காசி, வாரணவாசி என்னும் இரு பெயர்கள் பதிவாகியுள்ளமையைக் காண முடிகிறது.*

**வில்லிபாரதம்:**

> ***காசி மன்னவன் கன்னியர் மூவரும்*** *(1- 123/1)*
>
> ***நாடி மாலையிட வந்த காசிப்பதி நல்கும் ஒல்கும் இடை நவ்வியும்*** *(1-149/3)*
>
> ***காசித் தலைவன் கன்னியர் தம்கண் போல் வடு முற்றிய கனியை*** *(10-34/1)*
>
> ***காசி நரேசனும் ஏழ் உயர் ஏழ் மத மாரி சிந்தும் கரிமேலோர்*** *(44 -11/2)*
>
> ***காசிமன் கேமதூர்த்தி காய் அயில் ஒன்று வாங்கி*** *(44-14/2)*

*என வில்லிபாரதத்தில் காசி என்னும் நகர் ஐந்து இடங்களில் பதிவாகியுள்ளது.*

**தேவாரம்:**

> ***மட்டூர்மட பாச்சிலாச்சிரமம் மயிண்டீச்சுரம் வாதவூர் வாரணாசி***
> ***கட்டூர் கடம்பூர் படம்பக்கம் கொட்டும் கடல் ஒற்றியூர்***
> ***மற்று உறையூர் அவையும்***
>
> *(சம்பந்தர் தேவாரம்: 1890:1,2)*
>
> ***வானோர் வணங்கும் மணஞ்சேரியும் மதில் உஞ்சை***
> ***மாகாளம் வாரணாசி*** *(அப்பர் தேவாரம்: 2159:2)*
>
> ***மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர் வக்கரை மந்தாரம்***
> ***வாரணாசி*** *(அப்பர் தேவாரம்: 2791:1)*

*இவ்வாறாகச்சம்பந்தர்தேவாரத்தில்ஓரிடத்திலும்அப்பர்தேவாரத்தில் இரண்டு இடங்களிலும் வாரணாசி குறிப்பிடப்பட்டுள்ளது. வாரணாசி தேவாரத்தில் பாடல்பெற்ற தலமாக இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.*

**பெரியபுராணம்:**

> ***மின்னு வேணியர் வாரணாசி விருப்பினோடு பணிந்து உடன்*** *(திருநின்ற சருக்கம்: 1- 353/2)*

*திருநாவுக்கரசு நாயனார் கயிலைக்குச் செல்லும் வழியில் வாரணாசியில் மின்னு வேணியரை விருப்பினோடு பணிந்து வணங்கியதாக மேற்கண்ட பெரியபுராணப் பாடலடி கூறுகிறது.*

**நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்:**

***காய்சினத்த காசி மன்னன் வக்கரன் பவுண்டிரன்*** *(858:1)*

*என்று திருமழிசை ஆழ்வார் தன் திருச்சந்தவிருத்தத்தில் காசி மன்னன் வக்கரன் பவுண்டிரனைக் குறித்துக் கூறியுள்ளார்.*

**ஈடு முப்பத்தாறாயிரப்படி:**

***அரை க்ஷணத்திலே வாராணஸியை த³ஹித்து*** *(2-10-5)*

*திருவாய்மொழி இரண்டாம் பத்தில் இடம்பெறும் 'அறமுயல் ஆழிப் படையவன் கோயில்' என்னும் பாடலடிக்கு ஈடு முப்பத்தாறாயிரப் படியிலே பெரியவாச்சான்பிள்ளை உரையெழுதும்போது மேற்கண்டவாறு வாரணாசியைக் குறிப்பிடுகிறார்.*

**திருப்புகழ்:**

***காள கண்டன் உமாபதி தருபாலா***
***காசி கங்கையில் மேவிய பெருமாளே*** *(661)*

***கான கக்குற மாதை மேவிய***
***ஞான சொற்கும ராப ராபர***
***காசி யிற்பிர தாப மாயுறை பெருமாளே*** *(662)*

***கந்துப் பரிமயில் வாகன மீதிரு***

***கொங்கைக் குறமக ளாசையொ டேமகிழ்***
***கங்கைப் பதிநதி காசியில் மேவிய பெருமாளே*** *(663)*

*மேற்கண்ட பாடலடிகளில் முருகப் பெருமானை காசித் திருத்தலத்தில் கங்கை நதிக் கரையில் எழுந்தருளி உள்ள பெருமை மிக்கவரே என்றும் காசியிற் பிரதாபமாய் உறைபவர் என்றும் கங்கைப்பதி காசியில் மேவியவர் என்றும் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். இதன்மூலம் குமரக் கடவுள் காசியம்பதியிலும் உறைவதை அறியமுடிகிறது.*

**சிவபோகசாரம் - குருஞானசம்பந்தர்:**

***தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்***
***முல்லைவனம் கூடல் முதுகுன்றம் - நெல்லைகளர்***
***காஞ்சிகழுக் குன்றமறைக் காடுஅருணை காளத்தி***
***வாஞ்சியமென் முத்தி வரும்***

*மேற்கண்ட பாடலில் முத்தி தரும் தலங்கள் 14 குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் காசியும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.*

**திருவிளையாடல் புராணம்:**

***புதிய தாமரை மேவிய பழமறைப் புத்தேள்***
***விதியி னாற்கடு நடைப்பரி மகஞ் செய்வான் வேண்டிக்***
***கதியை மாய்ந்தவர்க் குதவுதண் டுறைகெழு காசிப்***
***பதியின் மைந்தரோ டெய்தினான் பண்டொரு வைகல்.***

*(திருவிளையாடல் புராணம், மதுரைக் காண்டம் 16)*

*வாடாத தாமரை மலரில் உறையும், பழைய வேதங்களை யுணர்ந்த பிரம தேவன், அவ் வேத விதிப்படி, விரைந்த நடையினையுயடைய துரக வேள்வி செய்தற்கு, விரும்பி, (தன்னிடத்து வந்து) இறந்தவருக்கு, வீட்டுலகைத் தருகின்ற, குளிர்ந்த நீர்த்துறைகள் பொருந்திய, காசி என்னுந் திருப்பதியின் கண், முன்னொரு காலத்தில், புதல்வர்களோடு சென்றான் என்பது மேற்கண்ட பாடலின் பொருளாகும். இதில் அதனிடத்து விரும்பிச் சென்று இறந்தவருக்கு வீடுபேற்றைத் தரும் புண்ணியத் தலமாகக் காசி சிறப்பிக்கப்பட்டுள்ளது.*

**ஞானவரோதயர் - உபதேசகாண்டம்:**

***தொன்றுதொட்டிரு பாதகமெலாம் அகற்றும் சூழலாம் காசி மாநகர்*** *(2270)*

*இப்பாடலில் பழவினைகள் அனைத்தையும் அகற்றும் மாநகர் காசி என்று ஞானவரோதயர் குறிப்பிடுகிறார்.*

**காஞ்சிப் புராணம்:**

***காசியி னின்றும் போந்து கம்பர்தாம் அருளப் பெற்று***
***மாசிலாக் கச்சி மூதூர் மன்னிவீற் றிருந்து பூமேல்***
***ஆசிலாத் தமிழ்ப ரப்பி அருந்தமிழ்க் குரவு பூண்ட***
***தேசினான் மலய வெற்பிற் குறுமுனி திருத்தாள் போற்றி***

*மேற்கண்ட காஞ்சிப் புராணப் பாயிரப் பாடலில் அகத்தியர் காசியிலிருந்து காஞ்சிபுரம் வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் - சிவப்பிரகாச சுவாமிகள்**

***பெருமானே சிவஞானிப் பெயருடையோன் நினதருளால்***
***வருமான்மா பரமுத்தி மருவுதலே இயல்பாகும்***
***பரமான்மா உரைசெய்யப் படுகாசி முதலனதாந்***
***தருவதுநிற் கிடைத்திடனே*** *(85)*

***முனிப்புலி தொழுசிதம் பரம்கண் ணுற்றவர்***
***முழைப்புலி முழங்குமவ் வருணை யங்கிரி***
***நினைப்பவர் அமலவா ரூர்ப்பி றப்பவர்***
***நிகழ்த்துறு காசியிற் சென்றிறப்பவர்***
***தனிப்பெரு முத்தியை அடைவர்...*** *(91)*

*காசியில் இறக்க முத்தி கிடைக்கும் என்பதை மேற்கண்ட பாடலடிகள் உணர்த்துகின்றன.*

**திருவருட்பா:**

***துதிபெறும் காசிநகரிடத்து அனந்தம் தூயநல் உருவு கொண்டு ஆங்கண்*** *(மூன்றாம் திருமுறை: 2538/1)*

***வாசிக்க என்றால் என் வாய்நோகும் காசிக்கு***
***நீள் திக்கில் ஆனாலும் நேர்ந்து அறிவது அல்லது வீண்***
*(மூன்றாம் திருமுறை: 1962: 658,659)*

*என்று இராமலிங்க அடிகள் காசியின் பெருமையை விதந்தோதுகிறார்.*

**வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல்:**

***காசி ராமேசுவரம் கன்னியாகுமரியும் கண்டுவாரே னென்று சொல்லி*** *(பக்கம் 151)*

*என இக் கதைப்பாடல் காசி குறித்துக் குறிப்பிடுகிறது.*

**பாரதியார்:**

***காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்***
***காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்***
*(பாரதியார், தேசிய கீதங்கள்-பாரத தேசம்)*

*காசியையும் காஞ்சியையும் அந்நாளிலேயே சங்கமிக்கச் செய்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தம் இளமைக் காலத்தில் சில ஆண்டுகள் காசியில் தம் அத்தை வீட்டில் வாழ்ந்தார். சிவமடம் என்ற பெயரிலமைந்த அவ்வீட்டில் அவர் வாழ்ந்த வாழ்க்கை அனுபவங்களின் வெளிப்பாடாக 'ஆறில் ஒரு பங்கு' என்று சிறுகதையை எழுதியுள்ளார்.*

**கவிமணி - மலரும் மாலையும்:**

***உயர் காசியிலே நெய்த காலமும் போச்சோ*** *(895)*

*என்று தம் பாடலில் கவிமணி குறிப்பிடுகிறார்.*

**குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா**

***காசிக்குத் தாத்தாவும் சென்றுவந்தார் - உடன்***
***களிப்போடு பிள்ளைகள் சூழ்ந்துகொண்டார்***
***ஆசையாய்க் கூடியே பேசுகையிலே - அங்கே***
***ஆனந்தன் தாத்தாவைக் கேட்கலுற்றான்***

***அத்தையும் காசிக்குச் சென்றுவந்தாள் - இனி***
***அவரைக்காய் தின்பதே இல்லையென்றாள்***
***பாட்டியும் காசிக்குச் சென்றுவந்தாள் - இனிப்***
***பாகற்காய் தின்பதே இல்லையென்றாள்***

***இப்படிக் காசிக்குச் சென்றோரெல்லாம் - அங்கே***
***ஏதேனும் ஒன்றினை விட்டுவந்தார்***
***அப்படி நீயுமே விட்டதென்ன? - தாத்தா***
***அவசியம் கூறிட வேண்டு"மென்றார்***

***"கோபக்காரன் என்றே ஊரிலுள்ளோர் - என்னைக்***
***கூறிடு வாரன்றோ? ஆதலினால்,***

***கோபத்தைக் காசியில் விட்டுவந்தேன்" - என்றே***
***கூறினர் மறுமொழி தாத்தாவுமே***

***கண்ணனும் உடனேயே, "தாத்தா, தாத்தா - நீயும்***
***காசியில் விட்டதும் என்ன?" என்றான்***
***"இந்நேரம் கோபத்தை விட்டதாய்ச் சொன்னேனே***
***எங்கே கவனமோ?" என்றுரைத்தார்***

***முரளியும், "தாத்தா, நீ விட்டதென்ன?" - என்றே***
***மீண்டும் ஒருமுறை கேட்டிடவே,***
***திரும்பவும், "கோபத்தை விட்டே"னென்றே - தாத்தா***
***செப்பினர். முரளியும் "ஓகோ" என்றான்***

***அருணனுன், கோபுவும் அழகப்பனும் - இன்னும்***
***அலமுவும், கீதா, காவேரியுமே,***
***திரும்பத் திரும்பக் கேள்விதனைக் - கேட்கச்***
***சீறி எழுந்தார் தாத்தாவுமே!***

***"வேலையற்ற வெட்டிப் பிள்ளைகளா - என்ன***
***வேடிக்கையா இங்கே காட்டுகிறீர்?***
***தோலை உரித்தே எடுத்திடுவேன்" - என்று***
***சொல்லியே கையில் தடியெடுத்தார்***

***"கோபத்தைக் காசியிலே விட்டேனென்றார் - இதோ***
***குண்டாந் தடியுடன் வந்ததடா!***
***ஆபத்து! ஆபத்து!" என்றே சொல்லி - உடன்***
***அனைவரும் ஓட்டம் பிடித்தனரே!***

*காசிக்கும் போயும் கோபத்தைக் கைவிடாத தாத்தாவைப் பற்றி மேற்கண்ட பாடல் நகைச்சுவையோடு குறிப்பிடுகிறது.*

**தமிழ்நாட்டுக் கல்வெட்டு, செப்பேடுகளில் காசி (வாரணாசி)**

- *திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் உத்தமலிங்கேசுவரர் கோயில் தீபக்கம்பத்தின் கீழே உள்ள 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறது.*

***"இ நித்த தன்மம் பரிபாலன மகா நடத்தின பேரெல்லாங் காசி ராமேசுரம் சேவித்த பலன் பெருவாராகவும்"*** *(கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி 2, ப. 112.)*

- *ஈரோடு மாவட்டம் அனுமன்பள்ளியில் உள்ள சின்னம்மன் பெரியம்மன் கோபுரக் கலசத்தில் காணப்படும் 19ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு,* ***"யிந்த தருமத்தை ஆறாகிலும் விஹாதம் பண்ணினால் காசியில் கங்கைக்கரையில் காறாம்பசுவைக் கொன்ற தோஷத்தில்"*** *என்று குறிப்பிடுகிறது. (ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 1, ப.10)*

- *12.06.1761 அன்று ஈரோட்டில் உள்ள காவிரிக்கரை தர்காவுக்கு மைசூர் உடையார்களின் ஈரோட்டுத் தளவாய் ரங்கநாத திம்மரையனும், கந்தாசாரம், அட்டவணை, சேனபாகம், சேருவைகாரர் ஆகியோரும் தர்காவுக்கு வரும் அரதேசி, பரதேசி, பக்கிரிகளுக்கு அன்னமிடவும் ஆடை கொடுக்கவும் 4 மா நன்செய் நிலம் கொடையாகக் கொடுத்தனர். இதைப்பற்றிய கல்வெட்டு அத் தர்காவுக்கு முன் நடப்பட்டுள்ள கல்லில் காணப்படுகிறது. அதில்,* ***"யிந்தத் தர்மத்துக்கு ஆராமொருவர் விகாதம் பண்ணினால் காசி கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்றவனும் தாயைக் கோழ்த்தவன் துலுக்கரானால் மக்காவில் பன்றியைக் கொன்று தின்றவன் தாயாரு மகள்க் கோழ்த்தவன் பூமியாகாசங் கெடுக்கும் புத்திர சம்பத்தும் இல்லாம போமென்றவாறு"*** *என்று குறிப்பிடுகிறது. (ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 1, ப.39)*

- *செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள் என்னும் நூலில் செ. இராசு அவர்கள் செங்குந்தர்கள் பிற ஊர்களில் குடியேற்றமும் கோயில் பணிகளும் என்னும் தலைப்பின்கீழ்,* ***"காசி – கோயிலுக்கும் கோயில் மானியத்திற்கும் மணியம் கணக்குக்குச் சமய சங்கதி சோலையங்கிரி முதலி மகன் வாரணவாசி முதலியை நியமித்தனர்"*** *என்று குறிப்பிடுகிறார். (செ. இராசு, செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள், தென்னிந்தியச் செங்குந்த மகாசன சங்கம், சென்னை, 2009, ப.334.)*

- *16.08.1735 அன்று இரண்டாம் ஏகோசி மன்னனால் வெளியிடப்பட்ட செப்பேட்டில்,* ***"ஆவுபாயியம்மாளேன் கிறாமதான தாராதத்த சாதனம் பண்ணிக்கொடுத்தபடியினாலே யிதில் செல தரு பாஷாணம் நிதி நிஷ்சேபமிருந்தாலுஞ் சுகத்திலே சந்திராதித்தருள்ள மட்டும் புல்லும் பூமியுங் கல்லுங் காவேரியுங் காசிராமேசுரமுள்ள மட்டும் ஆண்டு அனுபவித்துக்***

***கொண்டு அன்ன தானச் சத்திர தற்மம் நடப்பிச்சுக் கொள்ளக் கடவனாகவும்....இந்த அன்னதான சத்திர தற்மத்துக்கு யாதாமொருவர் விகாதம் பண்ணுகுறார்களோ அவர்கள் காசி ராமேசுரத்தில்க் காராம் பசுவைக் கொண்ண தோழத்திலே போகக் கடவன்"*** *என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (செ. இராசு, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50, ப.79)*

- *தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் சுவாமிமலை வரதராசப் பெருமாள் கோயிலில் 20.01.1679 அன்று முதலாம் ஏகோசியால் வெளியிடப்பட்ட செப்பேட்டில் 23 நாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஒன்று காசிதேசமாகும்.* ***"காசிதேசமான நந்த தேசம்"*** *(செ. இராசு, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50, ப.18)*

- *09.06.1758 அன்று பிரதாப சிங் அவர்களால் வெளியிடப்பட்ட கொங்கணேசுவரர் கோயில் செப்பேட்டில் 56 தேசங்களில் ஒன்றாகக் காசிதேசமும் கூறப்பட்டுள்ளது.*

***"வஸ்த்துவை மறவாத குணசீலரான மகூஷதேச மாளுவ தேசம் மகுத தேசம் காசிதேசம்"*** *(செ. இராசு, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50, ப.149)*

- *06.02.1695 அன்று சகசியால் வெளியிடப்பட்ட செப்பேட்டில்,* ***"சுபநாம யோகமும் கர்ஜவாகரணமும் பெற்ற சுபதிநத்தில் வாராணசி மகாபிராக்ஞா ப்ருவோர் மத்ய"*** *என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (செ. இராசு, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50, ப.29)*

- *22.07.1713 அன்று தீபாம்பாள் பாயியால் வெளியிடப்பட்ட தீபாம்பாள்புரம் வன்மீகநாதர் கோயில் செப்பேட்டில்,* ***"இந்த தறும்மத்துக்கு யாதாமொருவன் அனுகூலம் பண்ணுகுறானோ அவன் காசியிலே கோடி சிவலிங்க பரிதிஷ்டையும் விஷ்ணு பரிதிஷ்டையும் பண்ணின பலத்தையும் பஹ்ம பரிதிஷ்டையும் கோடி கன்னிகாதானம் பண்ணின பலத்தை அடயக்கடவனாகவும்"***

*என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (செ. இராசு, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், ப.223, 224)*

- *சரபோஜியால் வெளியிடப்பட்ட திருமக்கோட்டைச் செப்பேட்டில்,* ***"இந்த தற்மத்தை யாதாமொருவன் பரிபாலநம் பண்ணினவர்கள் காசியிலே அசுபமேதி யாகம் பண்ணின பலன் உண்டு"*** *எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ. இராசு, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், ப.235)*

*மேற்கண்ட கல்வெட்டு, செப்பேட்டுச் சான்றுகளின் மூலம் அறச்செயலை மீறுவோரை எச்சரிக்கும் முகமாகக் காசி குறிப்பிடப்படுவதைக் காணமுடிகிறது.*

## தமிழ் நிகண்டுகளில் காசி (வாரணாசி)

*சேந்தன் திவாகர நிகண்டின் இடப்பெயர்த்தொகுதியில் காசியின் வேறு பெயராக* ***வாரணாசி*** *(5:121) குறிப்பிடப்பட்டுள்ளது.*

*பிங்கல நிகண்டின் அவனி வகையில் காசியின் வேறுபெயராக* ***வாராணசி*** *(4:12) குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சூடாமணி நிகண்டின் இடப்பெயர்த்தொகுதியில் காசியின் வேறுபெயராக* ***வாராணசி*** *(5:41) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மேற்கண்டவற்றிலிருந்து காசி நகரத்திற்கு வாரணாசி, வாராணசி என்னும் இரண்டு வேறு பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை கருதற்குரியது.*

## அபிதான சிந்தாமணியில் காசி (வாரணாசி) பற்றிய குறிப்புகள்:

*அபிதான சிந்தாமணி என்னும் நூலில் காசி பற்றியும் வாரணாசி பற்றியும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் வாரணவசி என்ற பெயரிலும் வாரணாசி நகரம் குறிப்பிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.*

***காசி:*** *இது மோக்ஷஸ்தானங்களில் ஒன்று. இது கங்காதீரத்திலிருந்து தன்னிற் பிரகாசிக்கும் தன்மையுள்ளது. இதில் சிவமூர்த்தி அடியவர் தியானித்தபடி காட்சி தந்து சித்தி அளிப்பர். இத்தலம் சர்வ சங்காரகாலத்தில் சிவமூர்த்தியின் சூலத்தலையில் இருந்து அழிவடையாதது. இத்தலத்தில் உயிர் நீங்கும் ஆத்மாக்களுக்குப் பார்வதி பிராட்டியார் சிரமபரிகாரம்செய்யச் சிவமூர்த்தி தாரகமந்திரம் உபதேசித்து முத்தியீவர். இத்தலத்தில் சயிகடவியன், இயக்கர்,*

*சம்வர்த்தனன் முதலியவர் பூசித்த சிவலிங்கங்களும் கோபூசித்த கோப்பியரேகம், கபிலாகாரமும் இன்னும் இருஷபத்துவசலிங்கம், பத்திரதோயதீர்த்தம், இரணியகற்பேசம், சுவலினேச்சுரம், பரலிங்கம், கந்துகேச்சுரம், சயிலேச்சுரம், சங்கமேச்சுரம், சுத்திமேசம், சுக்கிரேசம், சம்புகேசுவரம், மல்லிகார்ச்சுனம், ஈசானம், கணேச்சுரம், அகிலேச்சுரம், இராமேச்சுரம், கதம்பேச முதலிய தலங்களும் உண்டு. இந்த மகாத்தலத்தில் ஐந்து குரோசம் சிவலிங்கங்கள் இருத்தலால் ஆநந்தகானம் எனவும் இருந்த உயிரையளித்தலாலும் வேதியன் எடுத்த பிடிமணலில் தோன்றிய சிவலிங்கம் இருத்தலாலும், அவிமுத்தம் எனவும் ஆன்மாக்களுக்குச் சிவானந்தம் அளித்தலால் ஆனந்தகானம் எனவும், சர்வ சங்கார காலத்தில் பூதங்கள் ஒடுங்கும் இடம் ஆதலாம் மாமயானம் எனவும், சிவமூர்த்தி சோதி உருவாய் எழுந்தருளி இருத்தலாலும் முத்தி மாதுக்கு இருப்பு ஆதலாலும் காசி எனவும், உயிருக்குத் தருமம் அளித்தலால் தருமவனம் எனவும் பெயர்பெறும். இக்காசி பெண்ணுருவம் பெற்றுச் சிவமூர்த்தியை வணங்கித் தன்னை வணங்கினவர், முத்தியடைய வரம் பெற்றனள்.*

***வாரணாசி:*** *காசிக்கு ஒரு பெயர். வரணா, அசி என்ற நதிகளுக்கு இடையில் உள்ள பிரதேசம் ஆதலால் இதற்கு இப்பெயர் வந்தது. காசியை அடைந்தவரது பாபத்தைத் தடுத்தலால் வரணை என்றும், அந்நீரில் படிந்தோர் பாபத்தை அறுத்தலால் அசி என்றும் பெயர் உள்ள இரண்டு நதிகள் தெற்கு வடக்காய்ச் சூழ்ந்து இருத்தலால் இப்பெயர் பெற்றது (காசிகாண்டம்).*

***வாரணவாசி:*** *உக்கிர குலத்து அரசன் நகரம்*

***வாரணவசி:*** *உக்கிர குலத்து அரசன் நகரம்*

*மேற்கண்ட நூலில் பதிவாகியுள்ள சொற்களின் மூலம் காசிநகரத்தின் வரலாற்றையும் அந்நகரின் வேறு பெயர்களையும் அறிந்துகொள்ள முடிகிறது.*

# காசியை மையமிட்ட தமிழ் நூல்கள்

**1. காசிக்கலம்பகம்:**

இந்நூல் குமரகுருபர முனிவர் இயற்றியது. இது விநாயக வணக்கப் பாடலுடன் தொடங்குகிறது. காசியில் விளங்கும் விசுவநாதப் பெருமானின் அருள் திறமும் பெருமையும் இயல்புகளும், இங்கே இறந்தவர்கள் முத்தியடைவர் என்னும் கருத்தும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலில் இடம்பெற்றுள்ள தூது என்னும் உறுப்பு தலைவிக்காகத் தோழி இறைவனிடம் குருகினைத் தூது அனுப்புவதாக அமைந்துள்ளது. இறைவன் திருவிளையாடல்களாக வலிமைமிக்க பல அருட்செயல்களைச் செய்த அவன் புயங்களின் பெருமை புயவகுப்பில் கூறப்பட்டுள்ளது. பிச்சியார், கொற்றியார் என்னும் உறுப்புகளில் வரும் பாடல்களில் வரும் பாடல்களில் சிவவேடம் பூண்ட பிச்சியின் தொழிலுக்குரிய செய்திகளும் வைணவ வேடம் பூண்ட கொற்றியின் தொழிலுக்குரிய செய்திகளும் சிலேடையாக அமைந்துள்ளன. காசிநகரின் வளமையெல்லாம் கொழுத்த தமிழால் பாடிக் கொற்றியார் ஆடியதாகக் குமரகுருபரர் கூறியுள்ளது அவரது தமிழன்பைக் காட்டுவதாகும். ஊர் என்னும் உறுப்பில் தலைவனின் ஊராகிய காசியின் சிறப்புக் கூறப்படுகிறது. இவ்வுறுப்பு மட்டும் மூன்றுமுறை இந்நூலில் வருகிறது. இறைவன் செயல்களைச் சிலேடையாக வினாவும் விடையுமாகப் பாடிப் பெண்டிர் ஆடுவதாக இந்நூலின் அம்மானை உறுப்புக் குறிப்பிடுகிறது.

காசிப்பெருமான் திருவருள் பெற்றுப் பெருஞ்செல்வமெய்தி வரும் பாணன் ஒருவன், அவரிடம் செல்லும்படி மற்றொரு பாணனுக்குக் கூறியது பாணாற்றுப்படை என்னும் உறுப்பாய் அமைந்துள்ளது. இந்நூலின் இறுதியில் ஊர் என்னும் உறுப்பு மீண்டும் வருகிறது. இவ்வுறுப்பில் இருபத்து மூன்று பாடல்கள் அமைந்துள்ளன.

காசிக்கு அவிமுத்தம், ஆனந்தவனம் என்னும் பெயர்களுண்டு என்பதும், விசுவநாதருக்கு அகிலேசர், காசிநாதர் என்னும்

பெயர்களுண்டு என்பதும், விசாலாட்சியம்மைக்குப் பெருந் தடங்கண்ணம்மை, ஆனந்தவல்லியென்னும் பெயர்களுண் டென்பதும் இந்நூலில் உணர்த்தப்படுகின்றன. இந்நூல் கங்கையின் சிறப்பைக் கூறுகிறது. காசியில் பாவம் செய்தவருக்கு எம தண்டனை இல்லையென்றும், வயிரவக் கடவுள் தண்டனை மட்டும் உண்டு என்றும் கூறும் புராணச் செய்திகளை இந்நூல் விளக்குகிறது.

## 2. காசித் துண்டி விநாயகர் பதிகம்

காசித் துண்டி விநாயகர் பதிகம் பத்து ஆசிரியப்பாக்களால் ஆனது. இதனை இயற்றியவர் குமரகுருபரர்.

## 3. காசிகண்டம்:

இந்நூலினைக்காசிகாண்டம் என்றும் வழங்குவர். இந்நூலாசிரியர் அதிவீரராம பாண்டியர். இவர் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கண்டம் என்பது துண்டு, பகுதி எனப் பொருள்படும். காசியைப் பற்றிக் கூறும் பகுதி ‘காசிகண்டம்’ எனப்பட்டது. தனிநூலாக வழங்கியபோது ‘காசிகாண்டம்’ என வழங்கிற்று. வடமொழிச் சிவபுராணம் பத்து. அவற்றுள் ஒன்றான சங்கர சங்கிதை பன்னிரு பிரிவினது. அச்சங்கிதையின் நான்காம் பகுதி காசிகண்டம். அதன் தமிழ் மொழிபெயர்ப்பே காசி கண்டம் என்பது. இது 41 அத்தியாயங்களுடைய பூர்வகாண்டம், 59 அத்தியாயங்களுடைய உத்தரகாண்டம் என இரண்டு காண்டங்களுடையது. நூல் 2526 விருத்தங்களால் அமைந்துள்ளது.

இது காசிநகரப் பெருமையைக் கூறுவதுடன் பிரமச்சரியம், இல்லொழுக்கம், மகளிர் இலக்கணம், ஆசாரம், காலமறிதல், இம்மை மறுமை நெறிகள் முதலியன பற்றியும் எடுத்துரைக்கிறது. ஆசிரியர் வடமொழி மூலத்தையே தழுவிச் செல்வதால், இவர்தம் கற்பனை வளத்துக்கு நூலில் மிக்க இடமில்லை.

இந்நூலிலுள்ள சில பாடல்கள் தனியே தொகுக்கப்பட்டுத் தனிநூல்களாக வழங்குகின்றன. இதன் ஐந்தாம் அத்தியாயத்தில் அகத்தியர் இலக்குமியைத் துதிக்கும் ஆறு பாக்களும் (21-31) ‘இலக்குமி தோத்திரம்’ என்று வழங்குகிறது; பத்தாம் அத்தியாயத்தில், எட்டுப் பாடல்கள் ‘சிவாட்டகம்’ எனத் தொகுக்கப்பட்டு, மக்கட்பேறு விரும்புவோரால் விரும்பி

ஓதப்பெறுகின்றன. எழுபத்திரண்டாம் அத்தியாயம் ‘வச்சிர பஞ்சர கவசம்’ எனப்படும். இதனைப் பன்னிரண்டு பாடல்களாக்கிச் ‘சக்தி கவசம்’ எனக் கொண்டு ஓதுவர். காசி கண்டப் பகுதிகள் தனி நூலாக வழங்கும் தன்மையன.

காசியில் இறந்தோரை விசாலாட்சி தன் ஆடையால் விசிறி இளைப்பாறச் செய்ய, விசுவநாதர் அவர்கள் செவியில் தாரக மந்திரம் உபதேசித்து முத்தி வழங்குகிறார் என்பது சமய நம்பிக்கை. அதனை இந்நூல், ‘இத்தல மெய்தி இறக்குநர் யாரும் இளைப்பாற, உத்தரியங் கொடு மாதுமை வீசிட உமையோர்பால், வைத்துவரும் பொருள் மேவரு தாரக மறையோதி, முத்தியளித்திடும் இப்பதி யளவிட முயல்வாரே’ என்று கூறும். காசி நகரின் சிறப்பையும் பல்வேறு சமுதாய ஒழுங்குகளையும் நடைமுறைகளையும் இந்நூல் சுட்டுகிறது.

### 4. காசிரகசியம்:

காசியின் சிறப்புக் கூறிய நூல். இது மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. இந்நூலுக்கு கா. திருச்சிற்றம்பல ஞானியார் அவர்கள் உரை எழுதியுள்ளார்கள். 1012 திருவிருத்தங்களால் ஆன இந்நூலில் பாயிரம், குருபத்தி சொரூபம் உரைத்தம் அத்தியாயம், காசி மான்மியம் உரைத்த அத்தியாயம், திருமால் திருமகளுக்கு உபதேசித்த அத்தியாயம், சோமசன்மா முத்தியடைந்த அத்தியாயம், மகாசேனன் முத்தியடைந்த அத்தியாயம், நரநாராயணர் நாரதருக்கு உபதேசித்த அத்தியாயம், பரமசிவன் பார்வதிதேவியாருக்கு உபதேசித்த அத்தியாயம், பஞ்சக்குரோசப்பிரதக்கண மகிமையுரைத்த அத்தியாயம், மண்டபன் முத்தியடைந்த அத்தியாயம், பஞ்சக்குரோசப்பிரதக்ஷண இயல்புரைத்த அத்தியாயம், காசிவாச நியமம் உரைத்த அத்தியாயம், மாதேசன் முத்தியடைந்த அத்தியாயம், சத்தபுரி மகிமையுரைத்த அத்தியாயம், பிரமன் முதல் மூவரும் பூசித்த அத்தியாயம், துச்சோதா முத்தியடைந்த அத்தியாயம், நித்திய யாத்திரை விதியுரைத்த அத்தியாயம், காசிதேவி வரம்பெற்ற அத்தியாயம், காமகலை வரலாறு உரைத்த அத்தியாயம், வீரசேனன் முத்திபெற்ற அத்தியாயம், புராணிகர் இயல்புரைத்த அத்தியாயம், புண்ணியகீர்த்தி முத்திபெற்ற அத்தியாயம், பாதகக் கழுவாய் உரைத்த அத்தியாயம்,

*தேவர்கள் உபதேசம் பெற்ற அத்தியாயம், சனாதனன் முத்தியடைந்த அத்தியாயம், இரணியகருப்பன் முதலோர் முத்திபெற்ற அத்தியாயம், விட்டுணுசருமன் உபதேசம் பெற்ற அத்தியாயம் ஆகியவை இடம்பெற்றுள்ளன.*

**5. காசியாத்திரை**

*பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் இந்நூலினை யாத்துள்ளார். 1907ஆம் ஆண்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. அத்துவிதப் பொருள், பரஞ்சோதிக்கண்ணி ஆகியவை இந்நூலில் இடம்பெற்றுளன. இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை முதலிய யாப்புகளால் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலில் 608 பாடல்கள் இடபெற்றுள்ளன.*

**6. காசி மஹாத்மியம் அல்லது சிம்ஹத்வஜன் கதை**

*இந்நூல் வ.சு. செங்கல்வராயப் பிள்ள அவர்களால் 1906 ஆம் ஆண்டு எழுதி வெளியிடப்பட்டது. இந்நூல் குறித்து இதன் ஆசிரியர், "மலையாள பாஷையிற் சிவபுராணம் என்றொரு நூல் இருக்கின்றது. அது மலையாளக் கவிகளுள் மிகப் பிரசித்தி பெற்றவரான இராமாநுஜ எழுத்தச்சன் என்பவரால் எழுதப்பட்டது. அவர் காலம் ஏறக்குறைய 300 வருஷங்களுக்கு உட்பட்டதாகும். தமிழில் வரதுங்கராம பாண்டியர் அருளிச் செய்த பிரமோத்தர காண்டத்திலுள்ள சரித்திரங்களே இச் சிவபுராணத்துங் கூறப்பட்டுள்ளன. ஆனால் பிரமோத்தர காண்டத்திற் கூறப்படாத ஒரு திவ்ய சரித்திரம் இச் சிவபுராணத்திற் கூறப்பட்டுளது. அச் சரித்திரத்தைத் தமிழ்ப்படுத்தினால் அது தமிழ் நாட்டுச் சைவராயினோர்க்குப் பயன் தருமெனக் கருதி அதைத் தமிழில் எழுதலாயினேம்" என்று குறிப்பிடுகிறார். இந்நூல் காசித்தலத்தின் மேன்மை, கங்கையின் சிறப்பு, சிவபிரானது வள்ளன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. புத்திரப்பெறு இன்றித் துயருறுவோர் இச்சரித்திரத்தைப் படித்து உறுதியோடு சிவபெருமானை வழிபட்டால் புத்திரப்பேறோடு மற்ற எல்லாப் பேறுகளையும் பெறுவர் என்றும் இந்நூல் கூறுகிறது.*

## 7. காசி விசுவநாத சதகம்

இந்நூல் கனகராச ஐயர் என்பவரால் பாடப்பட்டது. இதில் காப்புச் செய்யுள் நீங்கலாக 109 பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பாடல்கள் ஆசிரிய விருத்தத்தால் ஆனவை. மிக எளிமையாக உள்ளன. பாடல்கள் 'காசினியை வாழ்விக்க வரநதி பெருக்கியருள் காசி விசுவேச சிவமே' என்று மகுடம் வைத்துப் பாடப்பட்டுள்ளன.

ஆசிரியர் விநாயகப் பெருமானை வணங்கி நூலைத் தொடங்குகிறார். காசி விசுவநாத சதகம் என்று நூலுக்குப் பெயரிட்டிருந்தாலும் நூலில் சிவபெருமானின் பெருமை மட்டுமின்றித் திருமால் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள், இறைவி எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள், திருமாலின் திரு அவதாரங்கள், அடியார் பற்றிய செய்திகள், முருகப்பெருமான் கோயில்கள், சமணர்களுடைய இருப்பிடங்கள் முதலியவை பற்றியும் ஆசிரியர் பாடியுள்ளார். மேலும், இவர் தென்னாடு, வடநாடு என்னும் பேதமின்றிக் கன்னியாகுமரி முதல் இமயமலை வரையுள எல்லாத் திருப்பதிகளையும் பாடியிருப்பதோடன்றி, ஈழநாட்டிலுள கதிர்காமம் போன்ற திருத்தலங்களையும் பாடியுள்ளார். இது ஆசிரியரின் பொதுநோக்குப் பண்பையும் தேசிய ஒருமைப்பாட்டுணர்வையும் புலப்படுத்துகின்றது. நூலில் வருணனை இடம்பெறவில்லை. பாடல்கள் பொருள்நயம் சொல்நயம் உடையனவாக அமைந்துள்ளன. எல்லாக் கோயில்களையும் நகரங்களையும் ஆசிரியரே நேரில் சென்று தரிசித்துத் தாம் கண்டவற்றைப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

## 8. ஸ்ரீ காசி யாத்திரா தீபம்

இந்நூல் ஸ்ரீகாசிவாசி கந்தையாஸ்வாமி அவர்களால் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 1904ஆம் ஆண்டு ஸ்ரீகாசியில் பட்டு பீதாம்பர வர்த்தகர்களாகிய கெ.எஸ். முத்தையா அண்டு கம்பெனியின் சொந்தக்காரராகிய களந்தை கே.எஸ். முத்தையா பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி சென்னை தாம்ஸன் கம்பெனியால் வெளியிடப்பட்டது.

நூலுக்கான விளம்பரப் பகுதியில், 'இத்தகைய ஸ்தலத்திற்கு, கொலை - பொய் - களவு - கள்ளருந்தல் - குரு நிந்தை என்னும் பஞ் சமாபாதகம் புரிந்துளோரேனும் வந்து, கங்கையிற் படிந்து முறையே

தெரிசிக்கில் பழவினை அகற்றி நற்பயன் அளிக்கும். இந்நூலிற் கூறும் நித்திய யாத்திரை முதல் தென்திக்கு யாத்திரை இறுதியாயுள்ள யாத்திரைகளே இகபர செளபாக்கியங்களை எளிதில் தருவதாய் உள்ளது' என்று இந்நூலின் பெருமை குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 24 யாத்திரைகளும் அவற்றின் பலன்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவை தவிர, வேறு சில நூல்களும் காசியைப் பற்றி வெளியாகி உள்ளன. ஆனால் அவற்றின் முழு விவரம் கிடைக்கவில்லை.

1. **காசிக்கதிர்காமவேலர் திருவருட்பா** - சிவஞான தேசிகர்
2. **காசித் தலத்தில் சத்தவாரணத்தில் எழுந்தருளியிருக்கின்ற 56 விநாயக மூர்த்திகளின் திருநாமங்கள்** - சிவானந்தமூர்த்தி
3. **காசி விசுவநாத சுவாமி பேரில் பதிகம்** (ஆசிரிய விருத்தம்) - சுப்புராய ஐயர்
4. **காசியாத்திரை விளக்கம்** - மயில்வாகனப் புலவர் (இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவரின் காலம் 1779-1816)
5. **காசித்துண்டி விநாயகர் திருவருட்பா** - ஆறுமுகநாவலர் பதிப்பித்தது
6. **காசித்துண்டி விநாயகர் பதிகம்** - சிவானந்த தேசிகர்

**பழமொழிகளில் காசி:**

எழுத்திலக்கியங்கள் அன்றி மக்களின் வாய்மொழி வழக்காறான பழமொழிகளிலும் காசி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதன் மூலம் காசியின் சிறப்பு தமிழ் மக்களின் மனத்தில் ஊன்றியுள்ளது என்பதை அறியலாம். அப்பழமொழிகள் பின்வருமாறு:

1. காசி இரண்டு எழுத்துத்தான்; காண எத்தனை நாள் செல்லும்?
2. காசிக்குத் திருவையாறு அதிகம்
3. காசிக்குப் போய்த் தயிர் கொண்டு வந்ததைப் போல
4. காசிக்குப் போயும் கருமம் தொலையவில்லை
5. காசிக்குப் போயும் மூடத் தவசி காலில் விழுகிறதா?
6. காசிக்குப் போன கடா மாடு போல
7. காசிக்குப் போனால் கால் ஆட்டலாம்; கால் ஆட்டக் கால் ஆட்டத் தோள் ஆட்டலாம்

8. காசிக்குப் போனாலும் அகப்பை அரைக்காசு
9. காசிக்குப் போனாலும் கதிபெற வழியில்லை
10. காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது
11. காசிக்குப் போனாலும் கக்கத்தில் மூட்டையா?
12. காசிக்குப் போனாலும் தன் பாவம் தன்னோடே
13. காசிக்கு வீசம் அதிகம் திருப்பூவணம்
14. காசியில் இருக்கிறவன் கண்ணைக் குத்தக் காஞ்சிபுரத்திலிருந்து கையை நீட்டிக்கொண்டு போவதா/ போனானாம்
15. காசிவாசி கண்ணைக் குத்தக் காஞ்சியிலிருந்து கைநீட்டிப் போனானாம்
16. காசியில் இறக்க முத்தி; கமலையில் பிறக்க முத்தி
17. காசியில் தண்டம்; பிரயாகையில் முண்டம்; கயையில் பிண்டம்
18. காசியில் வாசி அவிநாசி
19. கங்கைக்கு நிகரான நதியும் இல்லை. காசிக்கு நிகரான பதியும் இல்லை.
20. காசிராமேசுவரம் போனாலும் கருவாட்டு நாத்தம் போவாது

இந்துக்களின் வாழ்க்கையில் காசி இரண்டற இணைந்திருக்கிறது. கங்கைப் பேராறு காசியை வளைத்துக்கொண்டு ஓடுகிறது. கங்கையால் காசிக்குப் பெருமையா, காசியால் கங்கைக்குப் பெருமையா என்பதை அறுதியாகக் கூற முடியாது. கங்கையைப் பற்றியும் காசியைப் பற்றியும் இந்திய இலக்கியங்கள் அனைத்துமே கூறுகின்றன. காசி என்னும் ஊர்ப்பெயர் மக்களுக்குப் பெயராகவும் வழங்கி வருவது இத்தலத்தின் சிறப்பை உணர்த்தும். தமிழ் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் காசி நகரம் வாரணாசி, வாராணசி, வாரணவாசி, வாரணவசி, வாரணம் என்றெல்லாம் வழங்கி வந்ததை அறியமுடிகிறது.

★★★★★★


# பிற்சேர்க்கை

## தமிழகத்துக் காசித் தலங்கள்




**சிவகாசி**

விருதுநகர் மாவட்டத்தில் உள்ளது இக்கோயில். அரிகேசரி பராக்கிரம பாண்டியனால் இக்கோயில் கட்டடப்பபட்டது. சிவனுக்குத் தென்காசியில் கோயில்கட்ட விரும்பினான் அரிகேசரி பராக்கிரம பாண்டியன். அதற்காகச் சிவலிங்கத்தைக் கொண்டுவரக் காசிக்குச் சென்றான். லிங்கத்தை எடுத்துக் கொண்டு திரும்பும் வழியில் சிவனுக்கு உகந்த வில்வ மரத்தின்கீழ் ஓய்வெடுத்தான். அவ்விடத்திலிருந்து மீண்டும் புறப்பட்டபோது அந்த லிங்கத்தைச் சுமந்து வந்த பசுவானது அங்கிருந்து நகர மறுத்தது. இதனைச் சிவனின் மனவிருப்பம் என்று உணர்ந்து கொண்ட அரசன் பசுவானது நின்றுவிட்ட அதே இடத்தில் அந்த லிங்கத்தை நிறுவினான். காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட லிங்கம் நிறுவப்பட்ட அந்த இடம்தான் சிவகாசி என்றழைக்கப்பட்டது.



**தென்காசி**

முன்னொரு காலத்தில் செண்பகப்பொழிலைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி செய்த பராக்கிரம பாண்டியனின் கனவில் சிவபெருமான் தோன்றி, பாண்டியர்களின் முன்னோர்கள் வழிபட்ட லிங்கம் செண்பக வனத்தில் உள்ளதாகவும், கோட்டையிலிருந்து ஊர்ந்து செல்லும் எறும்புகளைத் தொடர்ந்து சென்றால் அங்கு ஒரு லிங்கத்தைக் காணலாம் என்றும் அதற்குக் கோயில் கட்டுமாறும் கூறினார். அதனை ஏற்றுப் பராக்கிரமப் பாண்டிய மன்னனால் தன் முன்னோர் வழிபட்ட லிங்கத்துக்குக் கட்டப்பட்டதுதான் தென்காசிக் கோபுரம். இந்தக் கோயிலின் பெயராலேயே இந்த ஊரும் தென்காசி என்று அழைக்கப்பெற்றது.




***விருத்தாசலம் (விருத்தகாசி)***

*திருமுதுகுன்றம் என்றும் பழமலை என்றும் அழைக்கப்பெறும் இத்தலம் கடலூர் மாவட்டத்தில் உள்ளது. காசிக்கு நிகரான புண்ணியத் தலம்.*



**திருப்பூவணம் (புஷ்பவன காசி)**

சிவகங்கை மாவட்டத்தில் வைகையாற்றின் தென்கரையில் உள்ளது இத்தலம். காசிக்கு வீசம் கூட என்னும் பெருமையுடையது.





**கடம்பர் கோயில் (தட்சிண காசி)**

காசிக்கு நிகரான இக்கோயில் கரூர் மாவட்டம் குளித்தலையில் உள்ளது. இக்கோயில் வடக்குநோக்கிய தலமாகும்.

## ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்



**குமரகுருபரர்**




**கேதார் காட்**





**ஸ்ரீ குமாரசுவாமி மடம்**



**தஞ்சை மன்னர் சரபோஜி**



**மணிகர்ணிகேசுவரர் திருக்கோயில்**




**பாரதியார்**



**பாரதியார் வாழ்ந்த இல்லம்
சிவமடம் (வாரணாசி)**



## காசியை மையமிட்ட தமிழ் நூல்கள்



உ

சிவமயம்.

காசிக்கலம்பகம்.

மூலபாடம்.

குமரகுருபரசுவாமிகள்

அருளிச்செய்தது.

சுத்தபாடமாகவழங்குவிக்கும்பொருட்டுத்தொண்டமண்டலத்துவேளாளர்களில் உயர்துளுவவேளாளராகிய

தேனாம்பேட்டை

வேங்கடகிருஷ்ணமுதலியார்

குமாரர்

சின்னத்தம்பிமுதலியார்

காஞ்சிபுரம்

சபாபதிமுதலியாரால்

பலபிரதிகளைக்கொண்டுபரிசோதிப்பித்துச்

சென்னைக்கல்விச்சங்கத்துத்

தமிழ்ப்புலவர்

திரு - வேங்கடாசலமுதலியாரது

சரஸ்வதிஅச்சுக்கூடத்திற்பதிப்பித்தார்.

சாலிவாகனசகாப்தம் - ௲௭௱௨ - விகாரிளு வைகாசிமீ

இதன்விலை - அணா - ௭.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாசபரம்பரைத்

திருவண்ணாமலையாதீனத்து

ஆறுமுகசுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்ட

# தலயாத்திரைப் பொதுவிதி.

## காசிமான்மியம்.

இவை

பறங்கிப்பேட்டை

**ந. தெய்வநாயகமுதலியாரால்**


சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

*(Copyright Reserved.)*

1882.



உ

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

# காசிரகசியம்.

ஸ்ரீகைலாசபரம்பரைத் திருவாவடுதுறை

ஆதீனம் மஹாஸந்நிதானத்துக்கு அடிமைபூண்டொழுகும்

ஸ்ரீசுப்பிரமணியத்தம்பிரான் சுவாமிகள் ஆஜ்ஞையின்படி

ஷை ஆதீனத்து வித்வான

ம-ா-ா-ஸ்ரீ

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றிய மூலமும்

கா. திருச்சிற்றம்பலஞானியாரவர்கள்

இயற்றிய உரையும்,

இஃது

ம-ா-ா-ஸ்ரீ கேமத்தாம்பட்டி

மு. பெ. பெரியகறுப்பன்செட்டியாரவர்கள் கூட்டாளி

ம-ா-ா-ஸ்ரீ இராமச்சந்திரபுரம்

மு அ. ரு. அண்ணாமலைசெட்டியாரவர்கள்

முயற்சியால்

பா. சொக்கலிங்கம்பிள்ளையவர்களது

சென்னை

[illegible] அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

விஷு வருஷம் [illegible].

1881.

Copy Right

V. S. IYER LIBRARY
22742
MADRAS-9

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-ஞானசம்பந்தகுரவே நம:

# காசிகாண்டம்.

சைவசிரோமணியாகிய

அதிவீரராமபாண்டியமகாராஜன்

அருளிச்செய்தது.

இஃது

சூளை,

சுப்பராய நாயகரால்

பரிசோதிக்கப்பட்டு,

புரசை,

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1884

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ விசுவேசர்துணை.

# ஸ்ரீ காசியாத்திராதீபம்.

இஃது

ஸ்ரீகாசிவாசி

கந்தையாஸ்வாமி அவர்களால்

வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதை

ஸ்ரீகாசியில்

பட்டு பீதாம்பர வர்த்தகர்களாகிய

கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனியின்

சொந்தக்காரராகிய

"களந்தை"

K. S முத்தையாபிள்ளை அவர்களின்

வேண்டுகோளின்படி

சென்னை

தாம்ஸன் கம்பெனியாரின்

மினேர்வா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1904

இதன் விலை.] [அணா 6

உ

கணபதி துணை.

சிவமயம்.

# காசி மாஹாத்மியம்

அல்லது

## சிம்ஹத்வஜன் கதை.

வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

எழுதியது.

சென்னை:

எம். வி. நாயுடு அண்டு கம்பெனியிற்

பதிப்பித்தது.

1906.

[All rights reserved.]

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
...IVANMIYUR MADRAS-4...

உ

சிவமயம்.

குமாரகுருப்யோநம:

---

திருந்தேவையெனுந் திருவிராமேச்சுரத்தைச் சார்ந்த

பாம்பன் :

ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்

அருளிச்செய்த

# காசியாத்திரை.

**First Edition 400—Copies.**

இது,

**(L. D. MUTHUKARUPPA PILLAY AVERGAL,**

*Agent Messrs. Madura Co., Ld., Pombun.)*

பாம்பன் மஜுராக்கம்பேனி ஏஜண்டு

லெ. து. முத்துக்கருப்பபிள்ளை யவர்களாற்

---

சென்னை :


புரோகிரஸ்ஸிவ் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1907.

இதன் விலை அணா—8.


கனகராச ஐயர்
இயற்றிய
காசி விசுவநாத சதகம்
பதிப்பாசிரியர்
முனைவர் த. இராசேசுவரி
International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்




வெளியீடு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம்
சென்னை – 600 100.

9 788119 249879